



ஓலை 85| ஓசை 208|செப்டம்பர் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்
தாற்றின் அடங்கப் பெறின்

## பொருள்

அடக்கத்துடன் வாழ்வதே அறிவுடைமை என்று அறிந்து, ஒருவன் அடக்கமாக வாழ்ந்தால் அவனது அடக்கம் நல்லவர்களால் அறியப்பட்டு அது அவனுக்குப் பெருமையைக் கொடுக்கும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

**மரபு பா கற்போம்** **சந்தக் கலி மண்டிலம்**

## ஆலயந் தொழுவது சாலவும் நன்று!

வான்கோவிலை விண்மீன்களும் வணங்கித்தொழல் வேண்டும்
ஊன்றிக்கதிர் வீசும்ஒளி தொழுதல்மிக வேண்டும்.
ஆன்றோர்தமை கோவில்யென தொழுமச்செயல் வேண்டும்.
சான்றோர்தமை கூடத்தொழல் மாந்தர்பணி வாகும்|

குன்றும்தொழும் கோவில்; மலை யருவித்தொழல் வேண்டும்.
குன்றாவளம் கொண்டநல்வினை ஆறும்தொழல் வேண்டும்.
குன்றாமணி நெல்லின்கதிர் கொடுக்கும்வயல் தொழுவோம்.
என்றுந்தன துழைப்பைத்தரும் உழைப்போர்தமை தொழுவோம்



பெற்றேதமை சீராய்வளர்த் தெடுத்துப்பெரும் கல்வி
முற்றுந்தனை அறிந்தேவுயர் அடைந்தேஇனி தாக
வற்றாவளம் பெற்றேமகிழ் வுடன்பிள்ளைகள் வாழ
பற்றால்தனை வருத்திக்கொளும் பெற்றோர்தொழல் நன்றே!

இயற்கைதனை இம்மண்தனை உயர்த்தும்வினை கொண்டோர்.
அயராதுழைக் கும்நல்வினை யாளர்தமை யாவும்,
புயலாய்ப்புவி மீதிழிவு செய்கீழவர் மாய
துயர்கள்களை தூயர்தமைக் கோவில்யென வணங்கு




* சந்தக் கலி மண்டிலம் - இலக்கணக் குறிப்பு:

மேலேயுள்ள பாடல்கள் சந்தக் கலி மண்டின பாடல்களாகும். நான்கு நான்கு சீர்கள் ஒவ்வோரடியிலும் பெற்று வரும் இதில், ஒவ்வோரடியிலும் முதல் மூன்று சீர்கள் கனிச் சீர்கள் பெற்று நான்காம் சீர் மாச் சீராக வரும் நான்கடிகளும் ஓரெதுகைப் பெற்று வரும். பொழிப்பு மோனைப் பற்றி சிந்திக்க வேண்டா! திறமையுள்ளவர் முதல் சீருக்கும் மூன்றாம் சீருக்கும் மோனை வைக்கலாம்.
இச் சந்தக் கலி மண்டிலம் கனி கனி கனி மா என்ற சந்த ஓசையில் பாடுவதற்கு இனிமையாக இருக்கும் காய்ச்சீர்களும் விரவி வரலாம்.

நெருப்பலைப் பாவலர் இராம.இளங்கோவன்

# ஓடி விளையாடு

கைக்குள் உலகம் களவு கொண்டதே
பைக்குள் தொழில்நுட்பம் பைத்தியம் ஆக்குதே
ஓடிய கால்களோ ஓரிடம் சாருதே
தேடும் *திடல்களோ தேம்பி அழுகுதே
பாரதி சொன்னதை பாத்தியம் செய்குவோம்
வாரணம் போலே வலிமை பெருக்குவோம்
ஆட்டமும் ஓட்டமும் ஆர்த்தெழும் போதினில்
கூட்டமாய் நன்மையும் கூடினில் சேர்ந்திடும்
வெட்ட வெளியிலே வேர்வைகள் சிந்திட
தொட்டுத் தொடருவோம் தொன்மைக் கொடியினை
வெய்யோன் வருவான் விளையாடச் சொல்லியே
*மெய்கள் நனைத்துதான் மேன்மை தருகுவான்
வீட்டினுள் ஆட்டமோ வீண்தான் உணர்ந்திடு
பூட்டிய கைகால் புலர்ந்திட ஆடிடு
நல்ல உடல்நலம் நாமதைப் பெற்றிட
செல்வோம் விளையாட சேர்ந்து

*திடல் - மைதானம்



கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

# ஒருவனுக்கு ஒருத்தி

பாரம்பரிய
விவசாயத்தில்
எத்தனையோ பயிர்கள்
அழகியல் சுமந்தாலும்
கோபுர கலசமாய்
வயிறு நிறைக்கும்
கழனி மணக்கும்
உமி காக்கும்
பொக்கிஷமாய்
கட்டமைப்பு அவிழ்க்கா
நெல் மணியாய்
சந்ததிக்கு கடத்தப்படும்
சங்கதியாய்
வாகை சூடுவது
ஒருவனுக்கு ஒருத்தி எனும்
பண்பாட்டுக் கவசமே



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# ஸ்ரீ கிருஷ்ண கானம்



கண்ணன் கண்ணன் என்று காலமெல்லாம்
கானம் இசைத்திடுக ஏழை மனமே;
கண்ணன் அவனெங்கும் நீக்கமற நிறைந்திருப்பான்;
காதலுடன் அவனை அழைக்கின்றோர் குரல்கேட்டால்
காற்றினும் வேகம் காட்டி விரைந்தே வந்திடுவான்!

காகுத்தன் இராமன் சென்றவழிநாம் செல்லாது
கால்போன போக்கில் போனதாலே அவதரித்தான்
கார்முகில் மாதவனும் யாதவரில் ஒருவனாக,
கடுந்தோள் பலராமன் கொண்டாடும் தம்பியாக,
காலமெல்லாம் கண்ணனென அவனைநாம் கொண்டாட!

பாண்டவர்களின் பெருந்தேவி பாஞ்சாலியெனும் கற்புக்கரசியின்
பாசமிகு அண்ணணாக துவேசமில்லா மன்னனாக
பாரதத்தில் அவதரித்தே பாரதப் போரில்
பார்த்தனுக்கு கீதை என்னும் பாடம் சொல்லி,
பாரில்நாம் பாங்குடன் வாழ்வதற்கே பாடுபட்டனனே!

யசோதையின் இளஞ்சிங்கம் கண்ட சோதனைகள்
யாரிங்கு கண்டது உண்டு இன்று வரையிலும்?
யாதவனாய் வந்தாலும் யாவரும் போற்றும்படியும்
யாரும் அறியாத புரியாத படியுமவன்
யாவரிலும் கலந்துநின்று ஆடியலீலை களெத்தனையெத்தனை!

கோபியரின் காதலனவன், கள்ளமற்ற காதலன்;
கோபியரைக் காக்க கோவர்த்தன கிரியை
கையின் சுண்டுவிரல் ஒன்றில் தூக்கினான்
குடையென, கொட்டிய மழையிலிருந்து காக்கவெனிலவன்
காதலைத்தான் என்னவென்று உரைப்பேன் யானே!

பார்த்தசாரதியாய் வந்தவனின் பாதங்களில் பாவியேன்
பாசமதை முழுமையாய் வைத்தேனில்லை; அவனைப்
பரவசமடையும் படிதுதித்தேனா வென்றாலதுவும் இல்லையாயினும்
பரபரக்கிறது எந்தனிதயம் பரந்தாமன் பெயரைப்
பத்தியுடன்சொல்வோர் "கண்ணன்" எனச்சொல்லக் கேட்டால்!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# அவளன்றி அசையாது

இல்லத்தரசியின் ஒரு நாள் பயணத்தை
என்னை ஏற்கும்படி
விளையாட்டைச் சொன்னாள்
ஒரு நாள்.
வீட்டில் தானே அசத்துவோம் என்று
ஏற்றுக்கொண்டோம் பட்டத்தை.
அதிகாலை வாசலில் கோலப்புள்ளிகள்
திசைக்கொன்றென திரும்பி நிற்க
முற்றுப்பெறாக் கோலத்தோடு
சமையலறை புகுந்தேன்.
பாத்திரக்குளியலை
பத்திரமாய் முடிக்க
காலை மெனு கழுத்தை இறுக்க
உப்பும் மிளகாய்ப் பொடியும்
கொண்டு ஒப்பேற்றியாச்சு.
அரிசிக்கும் பருப்புக்கும் அடிதடி போட்டு
அளவுக் குறைவாய் ரேசன் வாங்க
பத்து மணிக்கு நின்ற வரிசையில்
வெயில் கூலி கொடுத்து வீடடைந்தேன்.
மதிய உணவின் பட்டியல் நிரப்ப
மாலை ஆயிற்று.
குடிநீருக்கான தெருக்குழாய்ச் சண்டையில்
குடத்தை காவு கொடுத்து
கண்ணீரோடு வந்தேன்.
இரவுக்கு முன்னே பள்ளிப் பாடங்களை
வாரிசுகளுக்கென எழுத உதவுகையில்
இடுப்பும் காலும் வலியில் கதறின .
சுடச்சுட இரவின் உணவை
சமைத்து நிமிர்கையில்
மறந்துவிட்டது குளியல் என்பது.
அறைகளால் நிரம்பிய வீட்டினுள்
சமையலறையே கதியெனக் கிடந்தேன்.
சும்மா தானே வீட்டில்
சுகமாய் இருக்கிறாள் என்று
அரசியாக்கினோம்.
வாழ்ந்த பின் தான் தெரிகிறது
அவளன்றி அசையாது
ஓர் அணுவும் என்று.



கவிஞர் இளையவன் சிவா, நரசிங்காபுரம்

# வேலிக்கும் நீதியுண்டு

உரிமையுடையதை
ஊராருக்கு உரைத்தல்.
அடையாளக் குறியீட்டில்
அடங்கும் இடங்கள்.

வயல்வெளியில் வரப்பு
வீட்டிலிருப்பது வேலி.
கால்நடைகள் உள்ளே
கால்வைக்கா திருக்க

வனவிலங்குகள் ஊருள்ளே
வாராது இருக்க
அன்றெல்லாம் படலாய்
அழகுச் செடிகள்.



இரும்பில் முள்வேலிகளும்
இருத்தி வைக்க
இன்றோ மனிதநேயம்
இல்லாது போதல்

மின்கம்பியிலே இரவில்
மின்சாரத்தைப் பாய்ச்சல்.
தொடும் உயிர்கள்
துவண்டே இறத்தல்.

மனதிற்கும் உண்டு
மறைவாய் வேலி.
ஐம்புலனை ஓடவிட்டால்
ஐயமின்றி அழிவே.

ஆசையெனும் வேலியை
ஆணவத்தோடு தாண்டல்.
உறவுகளே சிலநேரம்
உரிமையை மீறுவர்.

பாதுகாவலரே தவறுவர்
பணத்திற்காய்த் தடுமாறுவர்.
வேலிக்கும் நீதியே
வேண்டும் எந்நாளும்.

மனிதநேயத்தோடு உயிர்களை
மாண்புடன் காத்திடுக.

கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

## இருபத்தி ஆறு

## பாகம்: ஒன்று

25. ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை

மன்னன் புண்ணியராசன் மனைவியுடன் பூஞ்சோலைக்கு வந்தான்
தனிமையில் இருக்கும் தரும சாவக முனிவரை வணங்கினான்
கனிவுடன் வினவினான், "கண்களில் காமம் இல்லாத இப்பெண் யார்?
தன் கையில் பிச்சைப்பாத்திரததுடன் அறிவுரைகள் கேட்கும் இவள் யார்?"

கஞ்சுகன் முன் வந்து அரசனை தொழுது அறிந்ததைக் கூறளானான்
அஞ்சாத கிள்ளிவளவனைக் காண காவிரி ஓடும் புகார் நகர் வந்தேன்
நெஞ்சாற அறவண அடிகள் இந்த பெண்ணின் வரலாறு கூறினார்
மஞ்சனை அறியா தவசி அவள் இங்கு வந்திருகக்கிறாள் என்றான்

மன்னனே, உன்னிடம் இருந்த அமுதசுரபியே என்னிடம் வந்தது
உன் முற்பிறப்பினையும் , இப்பிறப்பினையும் நீ அறியவில்லை
கனிவான பசுவின் வயிற்றில் பிறந்ததை நீ உணரவேண்டும்
மணிபல்லவம் புத்த பீடிகை வலம் வந்தால் தெரியும் என்றாள்.

வான் வழியே சென்று மணிபல்லவத்தை அடைந்தாள் மணிமேகலை
தான் முன்பு காயங்கரை ஆற்றங்ககரை வந்தது நினைவில் நிழலாடியது
சான்றோர் கூறிய முற்பிறவி அவள் முன் காட்சிகளாகத் தோன்றின .
தேன் மொழியாள் இலக்குமியாக முனிவரிடம் அறம் கேட்டு நின்றாள்

கணவன் இராகுலன் திட்டிவிடம் பாம்பின் நஞ்சினால் இறந்தான்
குணமான கணவன் பிரிவால் இலக்குமி தீயுள் மூழ்கி இறந்தாள்
மணநாள் முதல் துன்பம் அறியாதவள் இப்பிறப்பில் மணிமேகலை
வணங்கி புத்த பீடிகையை வலம் வந்தாள் மணிபல்லவத் தீவில்




தந்தை மண்முக முனிவன், தாய் பசு அறிந்தான் புண்ணியராசன்
சந்தையில் வளர்ந்த மகன் இப்பொழுது ஒரு நாட்டின் மன்னன்
மந்தையில் வளர்ந்த மகன் மன்னனின் தத்துப் பிள்ளையானான்
விந்தையான வாழ்க்கைச் சூழலில் வளர்ந்து நாட்டின் அரசனான்

அரச பொறுப்பினை உணராமல் உல்லாச வாழ்க்கை வாழ்ந்தான்
சரசமாடும் காரிகைகள் மடியில் உருண்டு புரண்டு மகிழ்ந்தான்
அரச காரியங்கள் அப்படி அப்படியே நிற்க காமத்தில் கட்டுண்டான்
தவசி மணிமேகலை அற நெறி அறிந்தான் தன் நிலை உணர்ந்தான்

மனம மாறிய அரசனை அமைச்சன் சனமித்திரன் அறிந்தான்
சினம் கொள்ளாமல் உளமாற புண்ணியராசனை பாராரட்டினான்
"கனம்பொருந்திய மன்னா அரச பொறுப்பினை ஏற்க வேண்டும்
மணிபல்லவத்திற்கு நான் சென்றுவரும் வரை பொறுத்தருள்க"

மரக்கலம் மூலம் மணிபல்லவத்தை அடைந்தான் புண்ணியராசன்
தரம்கெட்டு வாழ்ந்தவன் புத்தபீடிகை தொழுது வலம் வந்தான்
சிரத்தையோடு தன் முற்பிறப்பினை காட்சிகளாக அறிந்தான்
பரத்தையரை மறந்து நாடு போற்றும் நல்ல ஆட்சி தருவேன்"

தொடரும்...

கவிஞர் ந.திருக்காமு

# துணை தேடினேன் துயர் தீர்த்தது

தூதுவனாகத்தான்
துணைவனே வந்தாய்.

துயரத்தின் உச்சத்தில்
உழன்றபோதே மகிழம்பூவாய்.

வசந்தத்தின் நல்வரவாய்
நெஞ்சுக்குள் தென்றலானாய்.
நினைத்த மாத்திரத்தில்
முன்நிற்கும்
குலதெய்வமானாய்.

ஏக்கங்கள் எத்தனை?
ஏச்சுக்கள் கணக்கிலடங்கா.
சோகத்தில்
எழுந்த வருத்தங்கள்
சொல்லிலடங்குமோ?

வாழ்க்கை பயணத்தின்
வழித்துணையாய் வருவாயா?
விழிமொழிகளை
புரிந்து கொண்ட கண்ணாளா!

கண்களின் காட்சிகள்
நாடகமோ? ஈடேறுமோ?
தவிக்க வைத்த
தன்னிகரில்லா
தகைசால் தலைவனே.



எண்ணங்கள்
வண்ணங்களாகி
வழியெல்லாம்
வானவில்லின்

நிறங்களின்
மகிழ்ச்சியை
தந்துவிட்டே
நடக்கின்றாயே!

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# தூது

## அதிகாரம் : 69

அன்பும் உயர்குடிபிறப்பும்
வேந்தன் விரும்பும்.
பண்பும் உடையனாதலே
தூதரின் தகுதிகளாம்.

அன்பறிவு ஆய்ந்தறிந்த
சொல்வன்மையுமாம் இம்மூன்றும்.
தூதுரைப்போரின் இன்றியமையா
தகுதிகள் எனப்படுமாம்.

வேற்றரசனிடம் தம்மரசின்
வெற்றிக்குக் காரணமாம்.
தூதுரைத்திறனே தூதனின்
அறநூலறிவு வல்லமையாம்.

நுண்ணறிவு இனியதோற்றம்
ஆய்ந்தறிந்தகல்வி இம்மூன்றின்.
செறிவுடையோனே நல்தூதுரைக்கும்
செயலுக்கு தகுதியுடையோனாம்.

திரிக்காது தொகுத்துரைத்தும்
பயனற்றவை நீக்கியும்.
சுவைபடச் செய்தியுரைப்போனே
தலைவனுக்கு நற்தூதனாம்.

கற்பவைகற்று கடும்பார்வைக்கஞ்சாது
கேட்பார்க்கு புரியும்படிச்சொல்லி.
காலத்தோடு பொருந்துவன
அறிந்தோனே தூதுவனாம்.

தூது



அதிகாரம் : 69

கடமையறிந்து காலங்கருதி
இடமறிந்து சிந்தித்து.
சிறப்புற சொல்லும்
திறனோனே நற்தூதனாம்.

ஒழுக்கத்தூய்மையும் தக்கதுணையுடன்
மனத்துணிவுடைமையுமாம் இம்மூன்றும்.
வாய்க்கப்பெற்று விளங்குதலே
நற்தூதனின் தகுதியாம்.

வாய்தவறியும் வடுப்படும்
சொற்பேசா உறுதியுடையோனே.
வேந்தன்செய்தி மற்றரசுக்கு
வந்துரைக்கும் தகுதியுடையோனாம்.

தானழிந்திடினும் அஞ்சாது
தன்கடமை குறைபடாது.
வேந்தருக்கு சிறப்புண்டாகச்
செய்கிறவனே நற்தூதனாம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# சித்தாந்தம்

என் பாதை
முடிவின்றி நீண்டிருக்கிறது
கரடுமுரடாகவும்
முட்கள் நிரம்பியதாகவும்
இருக்கிறது.
இதில் தான் நான்
பயணித்துக் கொண்டிருக்கிறேன்.



அவரவர்களுக்கான
பாதைகளெல்லாம் விதிப்படி
ஆண்டவன் தீர்மானித்தது
என்கிறேன்.
உன் வாழ்க்கை
உன் கையில் எனும்
வாழ்வியல் சித்தாந்தத்தை
போகிற போக்கில்
ஒரு வழிப்போக்கனைப் போல்
என் செவிபட
சொல்லிப் போகிறாய்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# கொடுமுலகில்

நிலமெங்கே
குளிரெங்கே

தரையெங்கே
தளிர்தருவெங்கே

கொங்றீட் முளைத்த
கொடுமுலகில்



புல்முளைத்த
புதுவிடமோ

முகர்ந்து நாமும்
மோப்பம் பிடித்து

முடிவாக இங்கே
தங்கி விட்டோம்

சிறுதுரும்பும்
பல் குத்த உதவும்
சிறு புல்தரையும்
உறங்குவதற்கு உதவும்

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)



அகர முதல

# கருவண்டு விழியாளே

கண்டாங்கிச் சேலைக்காரி
செவத்த மேனிக்காரி
வட்டப் பொட்டுக்காரி
வாசனையான பூக்காரி
பின்னழகில் ரெட்டைச்
சடைப்பின்னல் ஆடுவதென்ன
மாமன் மனசு
மல்லுக்கட்ட நினைப்பதென்ன

கருவண்டு கருவிழியாளே
காதலைத்தான் கூறடியோ
கண்ணால் ஒரு
சேதி சொல்லிடு
ஏக்கத்தில் நான்தான்
தூங்காம தவிச்சிருக்கேன்
பம்பரமாய் ஒன்னோட
நெனப்பு சுழலுதடி
உள்ளமும் உருகுதடி
உறவாட நெனைக்குதடி

பச்சரிப் பல்லுக்காரி
பாசமான நேசக்காரி
ஆவாரம்பூ பூத்திருக்கு
ஆளானதை சொல்லியிருக்கு

மாராப்புச் சேலையில
மச்சான மறைச்சதென்ன
கள்ளச் சிரிப்புல
சங்கதியெல்லாம் நெறஞ்சிருக்கு



வெள்ளந்திப் பார்வையிலே
வெவரந்தான் மறைஞ்சிருக்கு
பஞ்சால பாதையத்தான்
பரப்பி விடுகிறேனே

மஞ்சத்தில கொஞ்சிடு
வண்ணக் கிளியே
காத்திருக்கேன் நாளொன்னு
பாத்திருக்கேன் வாபுள்ளே
கைவளை ஓசையில
கல்யாண சேதிதானே
அள்ளிக்கிட நானிருக்கேன்
மாலையிடக் காத்திருக்கேன்

அலுங்காம குலுங்காக
அன்னக்கிளி வாயேன்
ஒண்ணாத்தான் சேர்ந்திடலாம்
ஒத்துமையா வாழ்ந்திடலாம்

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# மனித மனம்

சிந்தையெல்லாம் சுயநலம்
விந்தையான மனிதமனம்
சந்தைகளாக்கிக் கொண்டிருக்கும்
சமூகம்

நீதி நேர்மை
சத்தியமெல்லாம்
நிஜத்தில் இல்லை
நினைவிலும் இல்லை

கருணைக்கடலும்
கருப்பு காந்தியும்
வாழ்ந்த வழியிலா
வந்தோமென்று
சந்தேகமெழுகிறது

'நான்' 'எனது' என்று
எப்பொழுதும் அலையும் கூட்டம்.
இவர்களுக்கு எப்பொழுதும்
பதவி பணத்தின் மீதே நாட்டம்

வேலைக்காகக்
காலைவாரிவிட்டு
மலர்ந்த மலராகச் சிரிக்கும்
அருவெறுக்கத்தக்க
அற்ப இனங்கள்



குறுக்கு வழியில்
அடுத்தவனை வீழ்த்தி
அடையும் மகுடத்தை
மானமின்றி அணியும்
மலட்டுச் சமூகமே

வலி பொதுவென
என்றுணர்வீர்
கரைபடிந்த எண்ணங்களைக்
களைந்து என்று
தூய்மையாவது
உங்கள் உள்ளம்
அடுத்தவர் வீழ
ஆழமாகப் பறிக்காதே பள்ளம்

மனிதனாய் இருப்பதைவிட
மனிதத்தோடிரு
விலங்குப் புத்தி
விலக்கினால் தான்
துலங்கும் உன்வாழ்வு

கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# தெரியா காலம்

பிழை இழைத்த மாந்தர்
வெம்பி வாடும் இயற்கை.
இருப்பிடம் தேடும் புல்லினம்.
இருப்பை தொலைத்த மரம்.
இரைப்பை நிரப்பிய நீர்த்துளி.
இரவெது பகலெது
தெரியா காலம்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# துயர் உறாதே!

துயர் உறாதே! அக்கையே!
உனக்கென்று நான் ஒன்று
சொல்வேன்; நீ கேள்.
நித்தமும் நீ வாழ்.
நாளை என்னாகுமோ;
என்னும் கவலையை விடாடொழி.



கண்ணன் ஒரு நாள்
கூப்பிடுவான் உன்னை.
"விண்ணுக்கு நீ வா!
விளையாடி, என்னுடன் இரு என்றே"
விருப்பமுடன் செல்வாய் அன்று;

விரும்பினயாவையும்
இங்கு விட்டு.
கோள்களும், கோவிந்தனும்
குறித்தபடி செல்வாய் நீ;
வைகுண்டம் நோக்கி
இவ்வையகம் விட்டு.

இச்சையுடனும் விழைவுடனும்.
என்று; என்று;
என்று துயர் உறாதே.
இன்று; இன்று
என்று; இன்பமுடன்
நீ இங்கு இரு.

அத்தனுடன் கூடிக் களி.
அன்பான மக்களுடன் பேசிக் களி.
தோழியரோடு பகடி
பேசி இன்புறு.
தோளுக்ககினியானை பாடி இன்புற்று இரு.

இங்கிருக்க ஆசை
மேலமும்புமாயின்;
ஐயன் கூப்பிட;
"ஐயா! சோலி மிக இருக்கு; இன்னமும், இங்கே;
நாளை வாரும் நீர்"
என்று சொல்லிப் போடு.

கவிஞர் சசிகலா விஸ்வநாதன், பெங்களூரு

# சீவுதலும் செதுக்குதலும்



என்னைச் சீவிக் கொண்டே
இருக்கிறாய் நீ!
உன்னைச் செதுக்கிக் கொண்டே
இருக்கிறேன் நான்
***
என்னைச் சீவச் சீவ
நானோ உடலளவில் குறைந்து
குட்டையாகி கடைசியிலே
காணாமலே போகிறேன்
***
உன்னை எழுத வைத்து
உன் மனதை அறிவால் உழுத வைத்து
உன் தலையெழுத்தையே மாற்றி - நான்
உன்னைச் செதுக்கச் செதுக்க நீயோ
உயர்ச்சியையே பெறுகிறாய்
***
எனது உடலிழப்பு
உனது உயிர்வளர்ப்பு
எனது தியாகம்
உனது வாழ்வுக்கான
யாகம்
***
நீயோ சீவுகிறாய்
நானோ செதுக்குகிறேன்
என்றுமே நன்றாய்ச் சீவு
எப்போதுமே நன்றாகச் செதுக்குகிறேன்
***
ஆம்...
நானோ பென்சில்
நீயோ பகுத்தறிவாளன்
***
சீவுதலும்
செதுக்குதலும்
சீவியத்துக்காகவே
அறி!

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், வெல்லபதியான்(இலங்கை)

அங்கே
அன்பு விதைக்கப்படுவதாய்
நினைந்தால் வணங்குவாய்
இல்லை
அங்கே
வெறுப்பு விதைக்கப்படுவதாய்
தெளிந்தால் விலகுவாய்
உள்ளத்து ஒளிவிளக்கே
நீயே அனுதினமும்
மனிதனை மனிதனாய்
வழி நடத்தும் புனிதம்



கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

# கண்ணன் பிறந்தான் எங்கள் கண்ணன் பிறந்தான்

கண்ணன் பிறந்தான் மன்னன் பிறந்தான்
மனக் கவலைகள் எல்லாம் மறைந்ததே
எங்களோடு உறவாடி உயிரிலே கலந்தான்
உன்னைப் பார்த்த நாள் முதல்
எங்கள் துன்பம் எல்லாம் நீங்கியதே
ஏழை குசேலேனை வாழவும் வைத்தானே
கேட்டவர் எல்லோருக்கும் கொடுக்கவும் செய்தானே
ஆயர் பாடி மாளிகையில் தாயின்
மடியில் நித்திரைக் கொண்ட கண்ணனே
தூணிலும் துரும்பிலும் வந்து நிற்பவனே
மின்னல் வானில் வலம் வந்தானே
எண்ணங்கள் நிறைவேறி மண்ணில்
நல்ல விதைகளை விதைத்துச் சென்றானே
கார்மேக கண்ணனே நிம்மதி தந்தவனே
அவனது கதைகளை கேட்டால் இன்பம்
மங்கலங்கள் எல்லாம் தன்னால் சேருமே
கல்லும் முள்ளும் பூவாய் மாறுமே
கண்ணன் பிறந்த நாளை பதிகமாக
பாடி மெய் மறந்தாரே பெரியாழ்வார்
கண்ணனைப் பார்க்க பரிசுகளோடு சென்றார்களே
ஆயர்பாடி களை கட்டி ஆட்டமும்
பாட்டத்தோடு சிறுவர்கள் மகிழ்ந்துச் சென்றாரே
கற்கண்டின் சுவைக் குன்றாதுப் போல
கண்ணனின் கதை இனிக்கச் செய்யுமே




கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# உந்தன் மடி மீது

மழைத்துளியிலே
வருடும் தனிமை வளியிலே
நான் தேடும் வெளிச்சம்
நீயல்லவா

தூர தேசத்தின்
நீலக்கடலிலே நீந்துகிறேன்
எந்தன் திசைக்காட்டி
நீயின்றியே



வழியறியாமல் நிற்கிறேனே
வாழ்வின் விதியில்
உன்னைச் சேரும்
வழியெதுவென்றே

விழைகிறேன்
நீளும் காலங்களில்
மறைந்தாலும்
காற்றில் கலந்த
துகளானாலும்
காதலே உன்னைச் சேரவே

வழியெங்கும் திறவா
கதவுகள் தாழிட்டாலும்
பிரபஞ்சத்தின்
அனைத்துக் கதவுகளையும்
திறப்பேன் அன்பே
உந்தன் மடி மீது
துயில் கொள்ளவே

கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ, விருதுநகர்

# கிராமத்து வாழ்க்கை

மடை திறந்து கொட்டும்
அடை மழையில் தோழிகளுடன்
குடையின்றியே நனைந்து
நடைபயில்வதில் சுகம்.

கூரையிலிருந்து விழும்
நுரை மிதக்கும்
நீர்வீழ்ச்சியில் குளிப்பதில்
நானுமோர் பைத்தியம் தான்



தேநீர்க் குளமாய்த்தெரியும்
மண்ணீர் கரைசலில்
சிறுகுழந்தையாய் சறுக்கி வீழ்ந்து
விளையாடுவது பேரானந்தம்.

ஓடும் நீரில் தாள் ம
ஓடம் செய்து விடுவதிலும்
கழியும் அழகிய மாலைப்
கல்லூரிக்கால பொழுதுகள்.

பிஞ்சு மாங்காயில் துளையிட்டு
மிளகாயோடு உப்பிட்டு இடித்து
உரைக்க உரைக்க ஊதிச்
சுவைப்பதில் உண்டு உல்லாசம்.

வேளாண்மை ஊதி செய்து
வயல் வரப்பெல்லாம் ஓடித் திரிந்து
வாய்க்காலில் ஆணையிட்டு
நீச்சலடிப்பதில் ஆனந்தம்.

இயற்கையோடு உறவாடி
கிட்டிப்புல்லும் பம்பரமும்
எட்டுப் பெட்டி விளையாடுவதில்
கழியும் நம் ஏகாந்தம்.

மதிலுமில்லை வேலியுமில்லை
சுதந்திரத்திற்குக் குறைவுமில்லை
வேலி தாண்டிப் போனதுமில்லை
சந்தோஷத்திற்கு ஏது எல்லை

கவிஞர் செண்பகச் சோலையாள் ஆய்ஷா, கம்பளை

# கானல்தானோ நீ எனக்கு



முகமறியா உறவே
உணர்வுத் தொகுதியில்
உன் வரவின் ஏற்பாட்டை
எதிர்பார்த்து வழிப்பார்த்து விழிகாக்குதடா

உளமறிய குணமறிய கனம்தாங்க நீ எங்கே?
விழிப்பிதுங்க மொழுயொதுங்கும்  அந்நாள் எங்கே?
என்னவனே மன்னவனே
மயக்கும் மாயகண்ணணே நீ எங்கே?

அமைதியாய் கிடந்திடும் கடல் திடுமென கொந்தளிப்பது போல
உன்னை பற்றி அமைதியாக கிடந்திடும் தருணத்தில்
உன்னை பற்றி பேச்சு எழ நீ தானோ என நான் காத்து இருப்பேன்
எனக்கான நீ இல்லை அது வேறாரோ? என தெளிவாகையில்
மனம் சொனங்கிடுதடா.

ஏன் உனக்கின்னும் என்னை காண தோனலையோ ?
மனதும் சிணுங்குதடா.

ஏக்கம் எதிர்ப்பார்பை தந்துவிடுதடா.
வா மன்னவா ஏனிந்த தாமத தடுங்களோ
நீ எனது வாழ்வின் கானல்தானோ.

கவிஞர் சுஹீனாஸ் பேகம், புத்தளம் (இலங்கை)

# நிழல்

நிழல் என்பது நிஜங்களின்
நிர்வாண நிலை

மறைக்கப்பட்ட உண்மைகள் நிழலில்
உலர்த்திய நிஜங்களாய்

பகலில் நம்முடன் இரவில் மாயமாய்
இது நிழலின் தொலையாத முகவரி

நிழலின் பக்கங்கள் என்றுமே
வெளிச்சத்தின் கிழிசல்களாய்

நிழல் உலகம் தினந்தோறும் இரவின்
ஆடையில் அம்மணமாய்



நிழல் அழகான கருப்பு வெள்ளை
ஓவியத்தின் கிறுக்கலாய்

மரணம் வரை மனிதனின்
பின்னால் பாதயாத்திரையாய்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# தவறு எனதோ

ஏக்கத்தில் ஏகாந்த இரவுகள்
துணையாய் மதியவன் நிற்க
என் அவனியை சுருக்கிட
நிறுத்தற் குறி இட்டு
தொடரும் உறவில்.

காதலில்
மூழ்கிய தவறுகள் எனதோ
இல்லை என் ஏகாந்தத்தின் விளைவோ

விழி நீர் கசிய
விரல் பிணைய
நுதல் முத்தம் பதிக்க.




அகம் முதலாய் புறம் வரையில்
அத்துணையும் பகிர
மூழ்கி கிடந்தது என் தவறானால்.

ஒரு சின்ன முக பாவனையில்
மொத்த சிகரத்தையும்
இடித்து தரைமட்டம் ஆக்கிட
இயலுமோ!

வியப்போடு விழிக்கிறேன்
சோர்ந்திடும் மெய்யாலும்
சோர்வோடு நிற்க்கும் உறவாலும்.

இப்படிக்கு நான்,

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# அவனின் மாதாந்திர வலிகள்

ஆஜானுபாகுவான
அவனின் வெளித்தோற்றமோ
ஊர்காவலிருக்கும் ஐய்யனாராக இருக்க
அவனோ கையறு அற்றநிலையில்
கதறி கொண்டிருக்கிறான் உள்ளுக்குள்

அந்த வானுக்கும்
இந்த ஆணுக்கும்
மாதத்தின் பாதிநாட்கள்
தேய்பிறையாகவே கழிகின்றது



பதினொரு மணியை எட்டிய
கடிகார முள்ளைக்கூட
எள்ளி நகையாடும் அவனை
வழக்கமாக இந்நேரம்
தேநீரும், புகையிலை சகிதமாக
வலம்வருபவன் வேலையை சாக்குகாட்டி
போக்கு காட்டுகிறான்
பதினொரு மணிக்கு டீக்கு

உணவு இடைவேளையை
நீரால் நிரப்புபவன்
மறந்தும் நினைப்பதில்லை
புன்பட்ட மனதை புகையிட்டு ஆத்த

வறுமைக்கு வாக்கப்பட்டு பல் இளிக்கும் மணிப்பர்சை
தடவியபடியே யோசிக்கிறான்
இன்று வாங்கித்தருவதாக
மகளிடம் அளித்த வாக்குறுதிபட்டியலை

ஒன்றையாவது நிறைவேற்றதான்
துடிக்கிறது அவனின்
தந்தை பாசம் ஏது செய்ய
அவனின் இந்த மாதாந்திர வலியை விட கொடிது
வலிக்காதது போல நடிப்பது தான்

நிறைமாத நிலவாய்
மணிப்பர்ஸ் நிறையும் வரை
பொறுத்துக்கொள்ளாதான் வேண்டும்
உதிரம் கசியாத அந்த மூன்று நாட்களை

கவிஞர் ரா. சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன், தென்காசி

# இன்னும் தொடர்கதையாய் பெண்கள் மீதான வன்முறைகள்

அன்றாடச் செய்திகளில் அதிகமாய்க் காண்பது
பெண்கள் மீதான வன்முறைகள்! பள்ளிகளில்
மாணவிகளுக்கு சக மாணவர்களால் ஆசிரியர்களால்
நிகழும் பாலியல் சீண்டல்கள்! பயணங்களில்
பெண்களுக்கு பாலியல் துன்புறுத்தல்! தேசிய
மாணவர் படையின் பயிற்சியாளர் போர்வையில்
மாணவிகளுக்குப் போலிநபரால் பாலியல் துன்புறுத்தல்!
மருத்துவக் கல்லூரி வளாகத்தில் மாணவியை
பாலியல் வன்கொடுமை செய்து கொலைசெய்தல்!
சிறுமிகளை கூட்டுப் பலாத்காரம் செய்கின்ற
மிருகங்கள்! மகளைச் சீரழிக்கும் கொடூரகுணம்
கொண்ட தந்தைகள்! இப்படியாகப் பட்டியல்
நீண்டு கொண்டே போகிறதே! பாலியல்
வன்முறைக்கான வரையறைகள், சிறப்பு நீதிமன்றங்கள்,
தண்டிப்பதற்கான சட்டங்கள் இவையெல்லாம் இருந்தாலும்
வன்முறைகளின் எண்ணிக்கை பெருகுவதைக் காண்கின்றோம்!
உலகளவில் மூன்று பேரில் ஒருபெண்
பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப் படுவதாக
உலக சுகாதார அமைப்பும் உரைக்கிறதே!
திரைத் துறையில் இவ்வவலம் பெருமளவில்!
உறவினர்களால் வன்முறைகள், வரதட்சிணைக் கொடுமைகள்,
பெருகுவதால் பெண்கள் உடலளவில், உள்ளத்தளவில்
பெரும் பாதிப்பும், உரிமைகளை இழக்க,
நேர்வதும் நாட்டிற்கே தீங்கன்றோ? சிறுவர்களைச்
சீரழிக்கும் வலைத்தளங்கள், திரைப்படக் காட்சிகளை
அறவே தடைசெய்தல் அவசியமே!குற்றவாளிகளை
விரைந்து தண்டிக்க வழிமுறைகளைக் கண்டறிந்து
அரசாங்கம் செயல்பட்டால் மாற்றங்கள் விளைந்திடுமே!



கவிஞர் ஏ.சீ.சேஷாத்ரி

# தெய்வம் வாழும் இல்லம்

வாழும் காலம் வசந்தமாய்
இனிமை நிறைந்த சொர்கமாய்
ஏற்றம் தந்த வாழ்வுக்கு உண்மையான உறவுகளும்
உயிராய் மதிக்கும் நட்புமே
பூத்துக் குலுங்கும் வசந்தமாய்
வாழ்வே மாறும் *அதிசயமாய்*



பணம்தான் உலகின் வாழ்வென்று
பகட்டாய் வாழும் மனிதர்களிடம்
உறவும் அன்பும் நிலைப்பதில்லை
இனிய வாழ்வு அமைவதில்லை
பணமே உண்மை வாழ்வல்ல
பண்பாய் வாழும் குணமொன்றே
*இனிமை சேர்க்கும் வாழ்விலே*

காட்டாற்று வெள்ளமென சீரி வரும் *புது வெள்ளம்*
சிறப்பில்லா நிலையோடு சில நாளில் அடங்கிவிடும்.

ஆறு குளம் ஏரி என்றும் அமைதியாக பயணிக்கும் நதிபோல்
வாழ்வு அமைந்தால் பூமிப்பந்தின் உயிரினங்கள்
*சுகமாய் வாழும்* நிலை வரும்.

ஆர்ப்பாட்ட வாழ்வெல்லாம் பணமிருக்கும் வரையிலே
அமைதியான அன்பு கொண்டு நேசம் பாசம் ஒன்றையே
வாழ்வின் மூச்சாய் கொண்ட மனிதன் உள்ளம்
*தெய்வம் வாழும் இல்லம்*

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# தனியன்

எத்தனை பேர் நம்மைச் சுற்றி
இருந்தாலும், நமக்காக
பார்த்துப் பார்த்து செய்தாலும்,
ஆர்பாட்டமும் அமர்க்களமும்
மண்டை வெடிக்கச் செய்தாலும்,
நிலையில்லாமல்
சுற்றி வரும் இன்ப துன்பங்களில்
மனம் ஒட்டாமல் சிறிது நேரம்
அமைதியாக இருந்திட விழையும்!
தனியனாக இருந்திட விரும்பும்!
நான் யார் என்ற பேருண்மையை
புரிந்திட வைத்து விடும்!
அனைத்தையும் ஒதுக்கி வைக்கத்
தெரிந்து கொள்ள முனைவோம்!
தனித்து இருப்பதால்
விளையும் இன்பம் தெரிந்திட!
தனிமையை நாடுவோம்!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

என் கவிகளுக்கு வலி அதிகம்
நீங்கள் விழி கொடுங்கள்
வழி திறக்கும்
ஒளி பிறக்கும்.



கவிஞர் தூர்வும் ரேகை, இலங்கை

# போய் வா காற்றே

சாளரங்கள் திறக்கும் போதெல்லாம்
சலிக்காமல் முத்தமிடுகிறாய்
காற்றே நீ
சிநேகித காற்றே
கூடு இல்லாமல் சுற்றும்
இளங்குமரியே



சங்கேதங்கள் எதும் உண்டோவென
யோசிக்கையில் பக்கத்து வீட்டில்
சலசலப்பு
பெண்ணின் காதலுக்கு
தடையுத்தரவு ரகசியமாய்

காக்கப்படும் அவசரம்
தன் வீட்டு செய்தினை
இத்துனை மென்மையாக
பேசுவார்களா இவர்கள்
சாளரம் சிரித்து
காற்றை துணைக்கு வைத்து
சேதி சேகரிப்பில்

அடுத்த வீட்டு செய்தியை
அதிர அதிர பேசும் வாய்
காணாமல் போன அதிசயம்
தலையை கண்டதும்
நலத்தின் தேடலில்
எதை மறைக்கவென ஆடும் நாடகம்

இப்பிடித்தான் நம்மைச் சுற்றியுள்ள
மனிதர்களின் பாசாங்கை
பார்க்கையில்
மௌனத்தை இழுத்து
வைத்து கொள்கிறேன்
பேசாமடந்தை திமிர்பிடித்தவள்
என்ற பட்டங்களின் சொந்தக்காரியாய்

காற்று மட்டும் கலையாமல்
சுற்றி வந்து சாளரத்து
கதவை அடைக்கச் சொன்னது
நமது நன்மைக்கோ என மனம்
எண்ணியது

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# மனதை தயாரிக்கிறேன்

அலைபாய்ந்து ஆவதென்ன
அமைதியாயிரு மனமே
நிலைகுலைந்து போகாதே
நிம்மதியாயிரு மனமே
சினமெதும் வேண்டாம்
சந்தோசமாயிரு மனமே
கனத்துபோக வேண்டாம்
கவலையற்றிரு மனமே
தேவையில்லாக் குப்பைகளை
தூக்கியெறிந்திடு மனமே
சுவைகள் ஆறையும்
சுவைத்திரு மனமே
முத்தமிழ் வாசித்தே
மகிழ்ந்திரு மனமே
தித்திக்கும் முத்திக்கு
தியானித்திரு மனமே
காமமில்லாத காதலை
கைகொண்டிரு மனமே
தாமதமாய் முடிவெடுக்காது
தீர்க்கமாயிரு மனமே
அச்சம் விலக்கி
அச்சமற்றிரு மனமே
உச்சம் தொட்டிடவே
உற்சாகமாயிரு மனமே
வஞ்சம் இல்லாமல்
வாஞ்சையோடிரு மனமே



நஞ்சேதும் இல்லாமல்
நன்றியோடிரு மனமே
அன்னையவள் மனதை
ஆனந்தமாக்கியிரு மனமே
உன்னை தெய்வம்
உவகையோடு வைத்திருக்கும்

கவிஞர் செ.இலட்சுமணக்குமார், ஈரோடு

# உன் நினைவுகள்

உன் நினைவுகள் சூழ்ந்த பின்
என் உயிரும் எதற்கடி
என்னுள் நீ வாழ
இந்த ஒரு ஜென்மம் போதுமா
ஜென்மங்கள் தொடர்ந்தாலும்
உன் நினைவுகள் மறக்குமா



கவிஞர் ஈ. தேவணிதன், பல்லடம்

# மழை

கண்ணாடிப் பூக்களாய்
மண்ணை முத்தமிட்டாய்!
கண்மூடித் திறக்கும் முன்னே
காணாமல் போகிறாய்!
நீ முத்தமிட்டதால்
மண்ணும் மணக்குது!
மக்கள் மனமும் குளிருது!
நெல்மணியும் வளருது!
பல மக்களின் பசியும் தீருது!



கவிஞர் ஜோதிமணி, தாராபுரம்

# மந்திரக்கோல்

மண்ணில் பிறக்கும் உயிர்கள்
யாவும் அன்பாய் வாழ்ந்திட
மந்திரக் கோல் வேண்டுமே.
மதவெறி இல்லாத மனிதநேயம்
மிக்க மனிதர்கள் பிறந்திட
மந்திரக் கோல் வேண்டுமே.



சாதிவெறி இல்லாத
சமுதாயம் அமைந்திட
மந்திரக் கோல் வேண்டுமே.

அனாதை இல்லம் காணாத
அன்பான பிள்ளைகள் அரவணைக்க
மந்திரக் கோல் வேண்டுமே.

ஏழை எளியவர்களுக்கு உதவும்
நல் உள்ளங்கள் இருந்திட
மந்திரக் கோல் வேண்டுமே.

ஏழ்மையிலும் நீதி தவறாத
நற்பண்புகள் நிலைத்திட
மந்திரக்கோல் வேண்டுமே.

பஞ்சமில்லா ஊரும்,
பட்டினியில்லா வயிறும்,
வஞ்சகம் இல்லா மனமும்,
வளமான வாழ்வும் வாழ்ந்திட
மந்திரக்கோல் வேண்டுமே.

வீடும், நாடும் செழிக்க
நல் ஆட்சி ஒன்று மலர்ந்திட
மந்திரக்கோல் வேண்டுமே.

நிலையில்லா வாழ்க்கையில்
நிரந்தரம் எதுவும் இல்லை
நிம்மதியாக வாழவே
மந்திரக் கோல் வேண்டுமே.

கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்

# நான் நல்ல கவிஞனல்ல

நான் நல்ல கவிஞனல்ல என்பதற்கான
மூன்று ஆதாரங்கள்

ஒன்று
என் எண்ணங்களையெல்லாம்
திறன்பேசியில் தட்டச்சு செய்கிறேன்.

இரண்டு
அவைகளை கவிதையென்றெண்ணி
அழிக்காமல் பத்திரப்படுத்துகிறேன்.

மூன்று
பத்திரப்படுத்தியது போதாதென்று
சமூக வலைத்தளங்களிலும் பகிர்கிறேன்.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# ஆடைகள்

ஆடை இல்லா மனிதன் அரை மனிதனாவான்
உடையே மனிதனின் அழகு,கம்பீரம், கௌரவமென உளதே.
கற்கால மனிதன் ஆடை இல்லாமலும்,
பிற்கால மனிதன் இலைகளை உடுத்தியும்
விஞ்ஞானம் வளர்ச்சியில் அஞ்ஞானம் போனதே!

நம் நாட்டில் பற்பல மதங்களும் உளதே
எம் மதத்திற் கேற்ப ஆடையும் உளதே
பாரம்பரிய ஆடையென புடவையே அணிந்தனர்
பாரமாய் மாறி பின்னாளில் நவநாகரீகமென்று சிலர்மாறினர்!

வெளிநாட்டு மோகம் அரைகுறை ஆடையாய்
களிப்பாட்டம் ஆடி திரிகிறார் சிலரே!
வண்ண ஆடைகள் அழகை சேர்த்திடும்
வெள்ளை ஆடைகள் மரியாதை சேர்த்திடும்
அள்ளும் அழகும் புடவைக்கு உண்டாம்
அன்றும், இன்றும், என்றுமே நன்றாம்



உடலுக்கு ஆடைகள் முக்கியமாகுமே
மனதிற்கு கருணை, அன்பு, இரக்கம் வேண்டுமே!

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# தனிமை

## தன்முனைக் கவிதைகள்

இரவின் அமைதியில்
நான் உட்கார்ந்து வெறிக்கிறேன்
தனிமை தவழ்ந்து
என் இதயத்தை நிரப்புகிறது



தனிமை என்னை
இறுகச் சுற்றியிருக்கிறது,
அந்த முள்ளுள்ள கொடியினிலும்
தளராது துடிக்குமென் இதயம்.

வலி நிறைந்த இதயம்
பார்வைக்காக ஏங்குகிறது
வெறுமையை விரட்ட
ஒரு மென்மையான கையையும்

என் தனிமையின் ஆழத்தில்
நான் காண்கிறேன்
நம்பிக்கையின் மினுமினுப்பு
மெதுவாக பிணைக்குமொரு ஒளி

என் தனிமையில் கூட
நான் பலம் காண்கிறேன்
நீண்ட கால சோதனைகளிலிருந்து
பிறக்கும் ஒரு நெகிழ்ச்சி

நான் தொலைந்துவிட்டேன்
எனை தவறாகப் புரியுலகில்
இந்த வெற்று மௌனத்திலும்
நான் குனிந்திருக்கவில்லை

உலகம் என்னை முழுவதுமாக
புரிந்து கொள்ளவில்லை
எதையும் தாங்கும் தைரியத்துடன்
எனக்கானப் பாதையில் நடக்கிறேன்

கவிஞர் ராஜ் ஆரோக்கியசாமி, பிச்சாண்டார் கோவில்

# பெருமூச்சு

அவள் சிந்தையால் எதுவும் நடந்து விடக்கூடாது என்பதில்
காளைகளின் பெருமூச்சு தெருவெல்லாம் மண்டிக் கிடக்கிறது !
//
மானுடப் புரட்சிக்கு அவள் சிந்தைப் பேனா வாளாய் அமைந்துவிட்டால்
வால் வெட்டுண்டு போய்விடுமோ என்று
சுருட்டிக்கொண்டு திமில் நிமிர மிரட்டுகிறது !
//
களர் நிலமாய் எப்பொழுதும் இருந்திடவே
பல சாட்டைக் குச்சிகளும் பதம் பார்க்கிறது !
//
வேட்டையாடி உண்ட கூட்டம் எது
விலங்குகள் ஒன்றும் புதிதல்ல
போராடி போராடி வெற்றி பெருமூச்சில்
தெருவெல்லாம் விளையாட்டு!
//
அடுத்த முயற்சிக்கு அணை போட காளை வந்தால்
அறிவு சூழ்ச்சியால் தடுத்து நிறுத்திவிடு
எப்பொழுதும் பூக்காடாய் மலர்ந்து விடு !



கவிஞர் தீ.சித்ரா,திருச்சி

**நாச்சியார் திருமொழி நான்காம் திருமொழி பாசுரங்கள்**
**1 முதல் 6 முடிய (ஆறு)**

நான்காவது பதிகமிது! கண்ணனைப்பெற கூடலிழைத்துப்
பார்ப்பதனை விரித்துரைத்தல் காண்கின்றோம்! குறிபார்க்கும்
முறையொன்று ஈதாகும்! அன்னவனின் அந்தரங்கக்
கைங்கர்யம் ஆற்றார்வம் நினைப்பானால் செயல்படவே
கூட்டிடுக எனவேண்டல் முதற்பாட்டின் வெளிப்பாடே!
இரண்டாவது பாசுரத்தே கோதையை அடைதற்கே
எம்பெருமான் சாதனத்தை ஏற்றுளதால்அப்பயனை
உற்றிடவே செய்வானோ என்றகுறி காண்கின்றாள்!
மூன்றாவது பாசுரத்தே கண்ணனவன் தன்னிடத்தே
வருவானேல் அதனையே நடத்திக்கொடு எனவேண்டல்
அமைந்திடுமே! நான்கதனில் ஆச்சர்ய லீலைபல
ஆற்றவலன் தன்னிடத்தே வருவானோ என்றகுறி
பார்த்திடுதல் நேரமையும்! பாடலைந்தில் பகையழிக்கும்
பண்பாளன் தன்னிடத்தே சேர்வானோ என்றகுறி
காண்கின்றாள்! பாடலாறு தன்முன்னே தனக்காக
அவதரித்தோன் தன்னோடு கூடுதற்கு நண்ணுவனோ
என்றகுறி கேட்டறிய விழைந்திடுதல் காண்கின்றோம்!
கோதையவள் உளத்தெழுச்சி பற்பலவும் பாவடிவில்
துய்த்திடுதல் மாமகிழ்வே! ஏதமைய தன்விழைவோ
விளைந்திடுமா என்றேக்கம் சாற்றுவதே பாவரிகள்!



கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# நகர்வலம் போவாமா

நடுவானில் நிலவோடு
நகரும் முகலோடு
நட்சத்திர ஒளியோடு
நதிக்கரை தென்றலோடு
நஞ்சில்லா இயற்கையோடு
நந்தவன பூ வாசத்தோடு
நயனமாக நிசப்தத்தோடு
நரிகளின் ஊளையோடு
நல்லன்பு காதலோடு
நவிழ்ந்துடும் பேச்சோடு
நற்றுணையாக இருவருமே
நடுஇரவிலே கரம்கோர்த்தே
நகர்வலம் போவாமா
நமக்குள்ளே நெருக்கத்தோடே.



கவிஞர் நீலாசுபாஷ், ஆத்கூர்

# உன்னிடம் மயங்குகிறேன்

## உன்னிடம் மயங்குகிறேன் உள்ளத்தால் நெருங்குகிறேன்

உன்னைப் பார்க்காத அந்த நாட்களில்
கடிகார முட்கள் சற்றும் நகரவில்லை;
எழுதாத உன் கடிதத்தின் வரிகளைத்
திறக்காத என் கண்கள் வாசிக்கும்;

வெளிச்சமில்லா இரவிலும் சுடுமா சூரியன்?
சொல்லாத உந்தன் வார்த்தை தேடுகிறேன்
வீசும் காற்றிடம் இரகசியம் சொல்கிறேன்;
விரைவில் உன்னிடம் செய்தியைச் சேர்க்கவே.

அருவி கொட்டும் பாறையில் அமர்ந்து
குருவிகள் கூடும் குன்றைப் பார்க்கிறேன் .
ஆர்ப்பரித்து என்னிடம் எப்போது வருவாய்?
அலையென உமது அன்பைத் தருவாய்?



காதல் வந்துன் வாயில் தாண்டட்டும்
கவிதை வரிகள் கனவிலும் கேட்கட்டும்.
தென்றல் வந்து தீண்டிச் செல்லட்டும்
அன்பைத் தந்து உள்ளம் நிறைக்கட்டும்.

கவிஞர் இளங்கதிர், சென்னை

# பொறுமை

சிசு அடம்பிடிக்கும் போது வந்திடும் பொறுமை
சிறு சிறு ஊடலைத் தவிர்த்திட வந்திடும் பொறுமை
மாணாக்கரிடம் ஆசான் காட்டும் பொறுமை
நோயாளியிடம் மருத்துவர் காட்டிடும் பொறுமை
வாடிக்கையாளரிடம் வியாபாரி காட்டிடும் பொறுமை
ஊழியரிடம் அதிகாரி காட்டிடும் பொறுமை
பெண்ணிடம் ஆணும் ஆணிடம் பெண்ணும் காட்டிடும் பொறுமை என
பொறுமை பொறுமையாக மேலோங்கி வளர்கிறது



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# நாடகம்

## காட்சி-5

(ராஜன் வீட்டின் முன்னறை. ராஜன் பேப்பர் வாசித்துக் கொண்டிருக்க, வேகமாக அவர் காலில் வந்து விழுகிறாள் மல்லிகா.)

**மல்லிகா:** என்னை மன்னித்து விடுங்கள். இனி மேல் ஒரு நாளும் உங்களை விட்டுப் பிரிந்து போக மாட்டேன்.

**ராஜன்:** ஒய், மல்லிகா என்னாச்சு?

**மல்லிகா:** நான் உங்களை லஞ்சம் வாங்கியாவது சம்பாதிக்கச் சொன்னேன். லஞ்சம் வாங்கிய தேவிகாவின் கணவர் மோகனை போலீஸில் பிடித்துக் கொண்டு போய் விட்டார்களாம்.

**ராஜன்:** பார்த்தாயா, நேர்மையாகவும் உண்மையாகவும் நடந்தால் வாழ்க்கையில் சந்தோஷமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க முடியும்.

**மல்லிகா:** பாருங்கள் இனி தேவிகாவின் குடும்பநிலை என்னவாகும்? அவர்களுடைய சொத்துகளையெல்லாம் அரசாங்க எடுத்துக் கொள்ளுமாம். அவளும் அவள் குழந்தைகளும் தெருவில் நிற்கப் போகிறார்கள். அவள் கணவன் ஜெயிலில் இருக்கப் போகிறான். உலகம அவர்களைப் பற்றி எவ்வளவு மோசமாக பேசும்.

**ராஜன்:** மல்லிகா நேர்மையாக வாழ்ந்தால் எப்போதும் சந்தோசமாக வாழ முடியும். நமக்கு வருகின்ற வருமானத்திற்குள் நாம் எப்போதும் வாழ்க்கையை நடத்திப் பழகிக் கொண்டு போதுமென்ற மனத்தோடு வாழ்ந்தால் பொன்னான வாழ்க்கையை அமைக்க முடியும். வா இறைவனை துதித்துப்பாடி நமக்கு இன்பமான சுகமான வாழ்க்கையைத் தந்தவருக்கு நன்றி. கீதம் பாடலாம்.

**மல்லிகா:** ஆம். என் பாவக் கண்களைத் திறந்த தேவனுக்கு எத்தனை முறை நன்றி சொன்னாலும் தகும்.

இருவரும் சேர்ந்து நன்றி பாடல் பாடுகிறார்கள்.

முற்றும்

திரு இரஜகை நிலவன், மும்பை

## நூல் அனுபவம் — கவிதை தொகுப்பு

காலங்காலமாக மனிதன் தன் மனப்பதிவுகளை தனக்குத் தெரிந்த கலை வடிவத்தில் பதிவு செய்து கொண்டே வருகிறான். எழுத்து கற்றவர்வர்கள் மட்டுமல்ல எழுத்து அறியாதவர்களின் வாய்மொழிகூட அற்புதமான கலைவடிவம் பெறுவதை காணமுடியும். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஏதோவொரு படைப்பாற்றல் சொல்லாகவோ , செயலாகவோ வெளிப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. அதை அடையாளப்படுத்துகிறவர்கள் அறியப்படுபவர்களாக ஆகின்றனர். வாய்மொழி கதையாடலிலும், பாடலிலும் உள்ள கலையம்சம் செய்நேர்த்தி மிக்க படைப்பாளியைக் கூட எளிதில் கடந்து சென்று உச்சம் தொடுவதை காணமுடியும். படைப்பு அது தன் கலையம்சத்தில் மிளிர்கிறதேயன்றி, வெற்றுமிடுக்குகளில் அல்ல.

இரஜகை நிலவன்பாரதியிடமிருந்து வெளிப்பட்ட வசனக்கவிதையின் வீச்சு, புதுக்கவிதை நவீனக் கவிதை, குறியீட்டுக் கவிதை, படிமக் கவிதையென கவிதை வெளி சதா விரிந்து கொண்டே வருகிறது. கவிஞர் இரஜகை நிலவன் பல ஆண்டுகளாக தொடர்ந்து எழுதிவருகிறார். நிறைய எழுதுகிறார்.

அண்ணாச்சி விக்ரமாதித்யன் கவிதையொன்று நினைவுக்கு வருவதை தடுக்க இயலவில்லை.

# புல்லின் மகுடம்

சொல்ல நினைப்பதெல்லாம்
சொல்லில் வருமா

சொல்லில் வந்ததெல்லாம்
சரிதானா

சொன்னது சொன்னதோடு
முடிந்துவிடுமா

முதல் மனசின்
மிச்சசொச்சம் எல்லாம்.



நண்பர் இரஜகை நிலவன் அவர்கள் அந்த இடத்திலிருந்து முன்னகர்ந்து வரவேண்டும். வருவார் என்ற நம்பிக்கை இருக்கிறது.

திரு தமிழ் நேசன், ஜெரிமரி

# பெ.நா.அப்புஸ்வாமி

## கட்டுரை

## அறிவியல் தமிழின் முன்னோடி



* நெல்லை மாவட்டம் பெருங்குளம் ஊரில் (1891) பிறந்தார். சென்னை மாநிலக் கல்லூரியில் சட்டம் பயின்றார். சென்னை உயர் நீதிமன்றத்தின் மேல் முறையீட்டு வழக்கறிஞராக சுமார் 50 ஆண்டு காலம் பணியாற்றியவர்.

* தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருத மொழிகளில் புலமை பெற்றவர். புத்தகம் படிப்பதில் அதிக நாட்டம் கொண்டவர். சிறந்த தமிழறிஞரும் தமிழ் நேசன் பத்திரிகையின் ஆசிரியருமான அ.மாதவையர் இவரது சித்தப்பா. இவரை ஒரு கட்டுரை எழுதும்படி கூறியபோது, பள்ளி யில் தமிழை முறையாகப் படிக்கவில்லை என்று கூறி மறுத்தாராம். உன்னாலும் எழுத முடியும் என்று சித்தப்பாதான் ஊக்கமளித்தார்.

* ‘பிரபஞ்சத்தில் மனிதன் தனித்திருக்கிறானா?’ என்ற கட்டுரையை முதன்முதலாக எழுதினார் அப்புசுவாமி. அதற்கு அதிக வரவேற்பு கிடைத்ததால், தொடர்ந்து எழுத ஆரம்பித்தார். அறிவியல் சிறுவர் இலக்கியத்தில் சிறப்பு கவனம் செலுத்தினார். கட்டுரைகள், கதைகள் என ஏராளமாக எழுதினார். பல சிறுவர் நூல்களை எழுதினார்.

* கா.சுப்பிரமணியம், வையாபுரிப் பிள்ளை, க.அ.நீலகண்ட சாஸ்திரி உள்ளிட்டவர்கள் இவரது நண்பர்கள். ‘கலைமகள்’ இதழில் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். கல்லூரியில் படிக்கும்போதே உ.வே.சா.வுடன் தொடர்பு இருந்தது. டி.கே.சி., கல்கி, வையாபுரிப் பிள்ளை, டி.எல்.வெங்கட்ராமய்யர், வாசன், ஏ.என்.சிவராமன் உள்ளிட்ட தமிழறிஞர்கள், பத்திரிகையாளர்கள் அனைவரும் கூடும் இடமாக இவரது வீடு இருந்தது.

* அனைத்து மொழிகளின் சிறந்த நூல்களும் தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்று விரும்பினார். மொழிமாற்றம் குறித்து பல வரையறைகளை வகுத்தார். அறிவியல், வரலாறு முதலான துறைகளில் ஏராளமான நூல்கள், கட்டுரைகளை ஆங்கிலம் தமிழ் இடையே மொழிபெயர்த்தார்.

திரு அ.வில்சன், இதழாசிரியர்

இவரது அறிவியல் கலைச்சொல்லாக்க முனைப்பு மகத்தானது. அணுப்பிளவு, துணைக்கோள், மின்னணு, புத்தமைப்பு, நுண்ணோக்கி, கதிரியக்கம் உள்ளிட்ட ஏராளமான அறிவியல் சொற்களைத் தமிழில் உருவாக்கினார். எளிய நடையில் தமிழ்க் கலைச் சொற்களைப் பயன்படுத்தி ஏராளமான அறிவியல் கட்டுரைகளை எழுதினார்.

* எப்போதும் தன் அறிவியல் அறிவைப் புதுப்பித்துக்கொண்டே இருந் தார். தமிழிலும் அறிவியல் கற்க முடியும் என்பதை நிரூபித்தார். 25 அறிவியல் நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். 'பேனா' என்ற புனைபெயரில் பல நூல்களை எழுதியுள்ளார்.

* எழுத்தாளர் சங்கம், குழந்தை எழுத்தாளர் சங்கம் ஆகிய இரண்டு அமைப்புகளும் இவருக்குக் கேடயம் வழங்கிச் சிறப்பித்தன. எதையும் நகைச்சுவையுடன் எடுத்துக் கூறும் தன்மை பெற்றவர். இசை ஆர்வம் மிக்கவர். பல இசை விமர்சனக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். 26 வயது முதல் 95 வயது வரை எழுதிக்கொண்டே இருந்தார்.

**முக்கிய நூல்கள்**

தமிழ்

- அணுவின் கதை
- பூமியின் உள்ளே
- சர்வதேச விஞ்ஞானிகள்
- பயணம் அன்றும் இன்றும்




மொழிபெயர்ப்பு

- அற்புத உலகம்
- விஞ்ஞானமும் விவேகமும்
- அணுசக்தியின் எதிர்காலம்
- கால எந்திரம்
- வங்க இலக்கிய வரலாறு
- வசனமும் கவிதையும்

திரு அ.வில்சன், இதழாசிரியர்

- வசனமும் கவிதையும்



ஆங்கிலம்

- A Bunch of Essays on Tamil Literature

மொழிபெயர்ப்பு

- Tamil Verse in Translation
- Kurinji-p-pattu
- Muttollayiram

* 'அற்புத உலகம்', 'மின்சாரத்தின் கதை', 'வானொலியும் ஒலிபரப்பும்', 'எக்ஸ்ரே', 'அணுவின் கதை' உள்ளிட்ட படைப்புகள் பாராட்டுகளைப் பெற்றுத் தந்தன. 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டுரைகள் எழுதியுள்ளார். 1979 முதல் 1983 வரை தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பணியாற்றினார்.

* இறப்பதற்கு முந்தைய நாள்கூட 'பாரத்ஸ் விஷன் ஆஃப் தி மதர்லேண்ட்' என்ற கட்டுரையை எழுதிப் பத்திரிகைக்கு அனுப்பினார். இறுதிவரை அறிவியல் தமிழுக்கு அரும்பணியாற்றிய பெ.நா.அப்புசுவாமி 95-வது வயதில் (1986) மறைந்தார்.

நன்றி

https://www.hindutamil.in/

# நாளை நமதே

## வார்த்தையால் பேசுவதை விட

## வாழ்ந்து காட்டுவதே

## சிறப்பு

அகமும் தமிழே    முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு    அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு    சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



## அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa    www.aagaramuthala.com    aagaramuthala@gmail.com